முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

# ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த**

**மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்**

**பிலவ வருடம் புரட்டாசி மாதம் 17ம் திகதி முதல் புரட்டாசி மாதம் 24ம் திகதி வரை**

**(03.10.2021 ஞாயிறு முதல் 10.10.2021 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞானிகள் மகிழ்ந்து சித்திமுக்தி
   நல்கியே ஞானபூமி ஆக்கிய
   ஞானிகள் மிகுந்த இந்தியா தமிழகத்தில்
   நாட்டிடுவேன் பிலவநங்கை திங்களில்
2. திங்களில் மூவையீர்திகதிமேல் அறுநான்குதிகதி வரை
   தேசமெங்கும் நடக்கும் வார நிகழ்வாக
   இங்கனமே எதிர்கால பலன்குறித்த ஆசி
   இயம்பிடுவேன் அகத்தியன் யானும்
3. யானுரைக்க பரத தமிழகத்தின்
   உயர்பதவியாளர்கள் ஆளுமைகள்
   ஞானவான்கள் ஆசி ஆலோசனைபட
   நல்ஆட்சிப் புரிதல் காண
4. காணவே பேரிடர் துன்பங்கள்
   கரைந்தோடி பாதுகாப்பாக மாறும்
   ஞானமிலா வணிகலாபம் போல்
   நேயமிலா மக்களை வறுத்தும்
5. வறுத்தும் வரிச்சுமை கூட்டி
   வாரிச் சுருட்டும் அபகரிப்பு நிலை
   கருத்திலா தொடரக் கண்டால்
   கட்டாயம் பின்னடைவு கொண்டு
6. கொண்டுமே உலகளவில் கடன்கள்
   குறையா வண்ணம் பெருகி
   திண்டாட்டம் பொருளாதாரம் வழி
   தேசங்கள் கண்டு தவிக்கநேரும்
7. நேருமை கொண்டு திட்டங்களை
   நல்வளர்ச்சிக்குச் செய்தாலும்
   வருவாய் இழப்பால் நிறைவேறா
   வாக்குறுதியாகவே நின்றிட நேரும்

8. நின்றிடா நிலைமைகள் சரியாக
நிதி நீதித்துறை வகைதனில்
என்றும் களங்கம் பற்றாதபடி
இன்னும் கட்டுப்பாடும் பாதுகாப்பும் கூட்டி
9. கூட்டியே செயல்முறை வளர
குறைவின்றி இந்தியா தமிழகம்
திட்டங்கள் யாவும் நிறைவேற்றி
தன்னிறைவும் வளர்ச்சியும் காணும்
10. காணவே ஆறுமுகனார் சக்தியாக
கலியினில் அவதரித்த அரங்கமகான்
ஞானவழி நம்பிக்கை வைத்துவர
நல்ஆட்சி ஞானஆட்சியாக மலரும்

வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

பிலவ வருடம் புரட்டாசி மாதம் 17ம் நாள் 03.10.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் புரட்டாசி மாதம் 24ம் நாள் 10.10.2021 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள் :

ஞானிகள் எல்லாம் உளம் மகிழ்ந்து ஞான வழி சென்று ஞானிகள் திருவடிகளை வணங்கியவர்களுக்கு சித்தி முக்தி அளித்து அவர்களையும் ஞானிகளாக்கி நவகோடி சித்தரிஷி கணங்களை உருவாக்கி ஞானபூமியாக தமிழகத்தை மாற்றியதால் ஞானிகள் மிகுந்த இந்தியா தமிழக தேசத்தில் பிலவ வருடம் புரட்டாசி மாதம் 17ம் நாள் 03.10.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் புரட்டாசி மாதம் 24ம் நாள் 10.10.2021 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை அகத்திய மகரிஷி யானும் வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இந்தியா தமிழகத்தில் அதிகாரத்தில் உள்ள உயர் பதவியாளர்கள், ஆட்சி பொறுப்பில் உள்ளவர்கள் எல்லாம் ஞானிகளின் அருளாசியின் துணையுடன் ஆட்சி செய்திட நாட்டினை பற்றியுள்ள இயற்கை பேரிடர்களும் நச்சுகிருமி அல்லல்களும் உயிர்பலிகளும் கரைந்து ஓடி தேசம் பாதுகாப்பு மிக்க தேசமாக மாறிடும்.

மக்களை ஆளும் அரசு மக்கள் மீது தயவுடன் நடந்து கொள்ளாமல் வணிகம் போல் நடந்து கொண்டு மக்கள் மீது வருவாய்க்காக மேன்மேலும் வரி விதித்து பொருள் சேகரித்து செயல்படுமானால் மக்கள் வரிப்பணத்தை வாரி சுருட்டி தன்னலமாய் செயல்பட்டால் இந்தியா கட்டாயம் பின்னடைவை காணும். நமது தேசம் உலக நாடுகளிடம் மேன்மேலும் கடன் வாங்கிடும் நாட்டின் கடன்சுமை அதிகமாகி பொருளாதார பின்னடைவை சந்தித்து பொருளாதார வீழ்ச்சியை அடைந்திடும்.

மக்கள் மீது அதிகமான வரிச்சுமைகளை விதித்து அதன் வழி ஈட்டிய பொருளை நேர்மையான வழியில் பல நல்ல திட்டங்களை உருவாக்கி வளர்ச்சிக்கு பாடுபட்டாலும் வருவாய்

இழப்பு உண்டாகி திட்டங்கள் நிறைவேறாமல் ஆகியே திட்டங்கள் எல்லாம் வெறும் வாக்குறுதியாக மட்டுமே இருக்குமப்பா.

ஆதலால் எல்லா நிலைமைகளும் விரைந்து சரியாகிட வேண்டுமாயின் நிதித் துறையிலும் நீதி துறையிலும் களங்கம் உண்டாகாமல் கறைபடியாமல் மிகுந்த கட்டுப்பாட்டுடன் செயல்படுவதோடு நிதி மற்றும் நீதியை பாதுகாக்கும் விதமாக உறுதியுடன் அரசு செயல்பட்டால் எந்த குறையும் இல்லாமல் திட்டங்கள் யாவும் நிறைவேறி இந்திய தேசம் தன்னிறைவும் வளர்ச்சியும் அடையும்.

நாடு நல்ல வளர்ச்சியை காண வேண்டுமாயின் கலியுகத்தை மீட்க முருகப்பெருமானின் அம்சமாக அவதரித்திட்ட ஆறுமுக அரங்க மகா தேசிகனார் கூறும் உண்மை ஆன்மீக ஞான நெறியினை ஆட்சியாளர் ஏற்று கடைப்பிடித்து மக்களை தயவுடன் வழிநடத்தி செல்ல செல்ல நாடு நலம் பெறும், நல்லாட்சி மலரும் ஞான ஆட்சியாக மாறி மக்கள் எல்லா துன்பங்களில் இருந்தும் விடுபட்டு மகிழ்வுடன் வாழ்ந்து சிறப்பார்கள் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–